பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (08-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 256

# கொழும்பில் குண்டு வெடிப்பு!

# 21 பேர் பலி!! 52 பேர் காயம்!!!

## எல்லாளன் படை மீது சந்தேகம்

கொழும்பு, ஒகஸ்ட் 8

தலைநகர் கொழும்பில், மேல் மாகாணசபை முதலமைச்சர் அலுவலக முன்புறத்தில் நேற்றுக் காலை 10.40 மணிக்கு பெரும் குண்டு ஒன்று வெடித்தது. இதனால் 21 பேர் உயிரிழந்தனர்; 52 பேர் படுகாயமுற்றனர்; மேல்மாகாணசபை முதல்வரின் அலுவலகம் பெரும் சேதமடைந்தது.

"எல்லாளன் படையே" இக்குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கொழும்பின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த — பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்களும் அமைந்துள்ள — கொழும்பு-7, கறுவாக்காட்டு பகுதியில் — இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு அருகில் இருந்த மேல் மாகாண சபை முதல்வரின் அலுவலகமே குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஆள் கடத்தல் அதிகரிப்பு

ஆட்களை கடத்திச் சென்று வெட்டிக் கொலை செய்யும் சம்பவம் திருகோணமலையில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் மூதூர் பகுதியில் கிராம சேவையாளர் ஒருவர் இரவு நேரத்தில் கடத்தப்பட்டார் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜி.சி.ஈ. வினாத்தாள்கள் வந்தன

## 2 மணிநேரம் தாமதமாக நேற்று பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 8

தற்போது நடைபெறும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

வினாத்தாள்கள் வந்து சேர்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் நேற்றுக் காலை நடைபெற்ற இரசாயனவியல் பகுதி II பாடத்துக்கான பரீட்சை யாழ். மாவட்டம் முழுவதும் இரண்டுமணி நேரம் தாமதமாகவே ஆரம்பமானது.

வினாத்தாளை எதிர்பார்த்து பரீட்சார்த்திகள் காலை 8-30 மணி முதல் 10-30 மணி வரை பரீட்சை நிலையங்களில் காத்திருந்தனர்.

வினாத்தாள்களை ஏற்றிவந்த 'ஹபரண' கப்பல் காலை

(5 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழின அழிப்பை எதிர்த்து

## வெகுஜன அமைப்புக்கள் நகரில் நாளை பேரணி!

யாழ்ப்பாணம், ஒக. 8

தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கை, பொருளாதாரத் தடை மற்றும் விவசாய உள்ளீடுகள் மீதான தடை என்பவற்றைக் கண்டித்து நாளை நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றது.

பேரணி காலை 9. 30 மணியளவில் நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகும்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வெகுஜன அமைப்புக்களின் சார்பில் பெரும் எண்ணிக்கையான மக்கள் நாளைய பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர். [ஐ]

### மணலாறில் நேற்று

## இராணுவ அதிகாரி குண்டு வெடிப்பில் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 8

மணலாறில் நேற்று நண்பகல் விடுதலைப் புலிகள் வைத்த குண்டு ஒன்று வெடித்ததில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஜானகபுர பகுதியில் படையினரின் அணி ஒன்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சமயம் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் மேலும் ஐந்து படையினர் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்த இராணுவ அதிகாரி படுகாயமடைந்த நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு மரணமானதாக நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. [ஐ-4)

## கட்டாய ராணுவ சேவை; பரிசீலிக்க குழு நியமிப்பு

கொழும்பு, ஒக. 8

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கட்டாய இராணுவ சேவையை வழங்குவது தொடர்பான "வெள்ளை அறிக்கை"யைத் தயரிப்பதற்கு மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிப்பதாக "லங்காதீப" செய்தி வெளியிட்டுள்ளது.

கட்டாய இராணுவ சேவை அமுலில் உள்ள அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இந்தச் சட்டம் எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதற்காக மேற்படி குழுவினர் சம்பந்தப்பட்ட நாடுகளிலிருந்து தொடர்புடைய ஆவணங்களைப் பெறும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-10]

## எமது பாதுகாப்பு ஏற்பாட்டை புலிகள் முறியடித்து விட்டனர்

### குண்டு வெடிப்பு குறித்து சந்திரிகா கருத்து

கொழும்பு, ஒக. 8

தலைநகரில் முன்னெப்போதும் இல்லாத அளவில் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளோம். எனினும் இம்முறை அவர்கள் எமது பாதுகாப்பை முறியடித்து விட்டார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

நேற்று கொழும்பில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பி. பி. ஸி. உலகசேவைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று பேட்டிஒன்றை வழங்கினார்.

தலைநகரில் மீண்டும் தாக்குதல் நடத்த இயலும் என்பதைக் காட்டுவது போல குண்டு வெடித்துள்ளது. அரசின் பாதுகாப்பு ஏற்பாட்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியே தாக்குதல் இலக்காம்

கொழும்பு, ஒக. 8

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை தகர்க்கும் நோக்கில் எடுத்து வரப்பட்ட குண்டே மேல் மாகாண சபை முதல்வரின் அலுவலக கட்டடத்தில் வெடித்துள்ளதாக கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜீ. பி. கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினி கட்டடத்தை நோக்கி கொண்டு செல்லப்பட்ட வழியில் குறித்த நேரத்துக்கு முன்பாக குண்டு வெடித்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ-6]

## தாம் விரும்பிய வேளையில் தாக்கும் திறமை புலிகளுக்கு

### பி.பி.ஸிக்கு பத்திரிகையாளர் பேட்டி

கொழும்பு, ஒக. 8

விடுதலைப்புலிகள் நினைத்தால் நாட்டின் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தாம் விரும்பியவாறு குண்டு மற்றும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் வல்லமை படைத்தவர்கள் என்பதனையே கொழும்புக் குண்டு வெடிப்புக் காட்டுகிறது —

எவ்வளவு தான் பாதுகாப்பை ஏற்படுத்தினாலும் அதனை முழு அளவில் பேணுவது என்பது கஷ்டமே. விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புகள் அத்தகைய பாதுகாப்பையும் மீறித் தமது தாக்குதல்களை நடத்துவதை

[ 6 ஆம் பக்கம் பார்க்க]

### வடக்கே உணவுப் பொருள்களுடன் வரும்

## கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்கும் விவகாரத்தில் இணக்கநிலை?

யாழ்ப்பாணம், ஒக. 8

வடக்கே வரும் உணவுக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் பணி மீண்டும் தொடரும் வகையில் இணக்கநிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பிலிருந்து நேற்றுக் கிடைத்த பிந்திய தகவல் ஒன்று தெரிவித்தது.

உணவுப் பொருள்களுடன் வடக்கே வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணி கள் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவால் நிறுத்தப்பட்டதையடுத்து கடந்த இருவாரங்களுக்கு மேல் உணவுக் கப்பல்கள் எதுவும் பருத்தித்துறைக்கு வரவில்லை.

இந்தப் பணியை தொடரும் வகையில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளுக்கும், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்று நடந்த பேச்சுக்களில் இணக்கநிலை ஏற்பட்டதாக நம்பத்தகுந்த தகவல் ஒன்று தெரிவித்தது.

கொழும்பில் உருவாகிய இணக்கநிலை குறித்து விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்திய பின்னரே உணவுப் பொருள் கொண்டுவரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

## உளம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

சைவப் பெரியார், இந்து சாதனப் பத்திராதிபர், சைவ பரிபாலன சபையின் முன்னாள் தலைவர்

**மூதறிஞர் நம. சிவப்பிரகாசம் ஐயா**

அவர்களுக்கு

உளம் நெகிழ்ந்த அஞ்சலிகளை உரியனவாக்கி அவர் பாதகமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

[37920]

## மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்ளும்முகமாக 9-8-1995 புதன்கிழமை அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய வியாபார ஸ்தாபனங்கள் யாவும் பூட்டி குறித்த ஆர்ப்பாட்டத்தில் சகல உரிமையாளர்களையும் கலந்து தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை உலகறியச்செய்ய ஒன்றுதிரளுமாறு யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

யாழ்.
வணிகர் கழகங்களின் இணையம்
செயலாளர்.

(சி-2012)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கணபதி இளையதம்பி

பிறப்பு: 08 — 04 — 1946
இறப்பு: 09 — 07 — 1995

அமைதியான பார்வையும் அன்பான உன்பேச்சும்
பொன்போல உன் சிரிப்பும்
போனதுவோ எம்மை விட்டு
ஆறாது அழுகின்றோம்- சித்தப்பா!
தினமும் கலங்குகின்றோம்
பாசமாகப் பழகிவிட்டு சித்தப்பா!
பாதியிலே பிரிந்தாயே விண்ணுக்கு
நேசமான எமையெல்லாம் நினைத்துத்தான்
நிம்மதியாய் போனாயோ இறைவனிடம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரர் மற்றும் உற்றார், உறவினர்கள்.

கணபதி நாகலிங்கம்,
6ஆம் வட்டாரம்,
நீர்வேலி தெற்கு.

(37917)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 01 — 1981
மறைவு: 09 — 07 — 1995

### ஜீவராஜ் பிரதீபன்

(வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 9ஆம் ஆண்டு மாணவன்)

சின்னஞ்சிறு கிளியே செல்வக்களஞ்சியமே ஏற்றி வைத்த தீபமாக எமது இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்த எம் திருவிளக்கே! வானில் ஊர்ந்துவந்த வல்லூறு ஒன்று கக்கிவிட்ட நச்சுக்குண்டால் எம்மை விட்டு மீளாத் துயிலில் ஆழ்ந்து கொண்ட தீபமே.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்கள்.

விரேசன் றோட்,
சாவகச்சேரி.

(37884)

## புலிகளின் குரல் வானொலியில்

08 – 08 – 1995

**செவ்வாய் இரவு**

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
- ★ 8-20 — நலந்தானா?— "போர்க்கால முதலுதவிகள் பற்றிய சில குறிப்புகள்"
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக் களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய 'உறுதி'
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

09 – 08 – 1995

**புதன் காலை**

- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகை செய்திகள்தொடர்ந்து-
- ★ நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

**செவ்வாய் மாலை**

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — இவ்வாரம் இவர்

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

நாளை புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற இருந்த பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றைச் சேர்ந்த பணியாளர்கள், பொது அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 16-8-95 புதன்கிழமை மு.ப. 10மணிக்கும் —

9-8-95 பி.ப. 3 மணிக்கு அவ்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மேற்படி கலந்துரையாடல் 16-8-95 பி.ப. 3 மணிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## ஸ்கந்தா ஆண்டு 9 மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஓக. 8

ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஆண்டு 9 மாணவர்களை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கல்விக் கோட்ட அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தவறவிட்ட தங்க நகை

யாழ்ப்பாணம், பலாலி வீதியில் உள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது என்றும்-

தவறவிட்டவர் உரிய சான்றைக் காண்பித்து அங்கு பெற்றுக் கொள்ளலாம் என்றும் வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [ஐ]

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
சகல ஊழியர்களுக்கும்

## விஷேட அறிவித்தல்

நாளை 09 - 08 - 1995ஆம் திகதி நடைபெறவிருக்கும் வெகு சன இயக்க ஆர்ப்பாட்டப் பேரணியில் சகல ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்.

- சி. பொ. தொ. யூனியன்
காங்கேசன்துறை.

[37913]

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ. மாவட்டம்

## விசேட பொதுசபைக் கூட்டம்

காலம்: 11-08-95 (வெள்ளி) காலை 9-00மணி

இடம்: புதிய விஞ்ஞான கல்வி நிலையம் (எழிலகம் முன்பாக)

விடயம்: 1. தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு எமது பங்கு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்
2. பிறவிடயங்கள்

அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்

★ பொது நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் அன்று காலை 8-00 மணிக்கே சமுகம் தரவும்.

— பொதுச்செயலாளர்

(சி-1996)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம்
Jaffna School's Cricket Association

## துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி - 1995
## இறுதிப் போட்டி 17 வயதின் கீழ்

புனித சம்பத்தரசியார் கல்லூரி எதிர்
யா / மத்திய கல்லூரி

மேற்படி போட்டி யா / பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

காலம்:
09 — 08 — 1995 பிற்பகல் 2-00 மணி முதல்
10 — 08 — 1995 முற்பகல் 9-00 மணி முதல்

பிரதம விருந்தினர்:
வைத்திய கலாநிதி ரி. டபிள்யு. ஜெயகுலராஜா

பரிசில் வழங்கல்: பிரதம விருந்தினர்

★ அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம். ★

நன்றி

த. தேவராஜா,
கௌரவ செயலர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

விளம்பர அன்பளிப்பு;
சாந்தி புடைவை அகம்
157, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[சி-2010]

## 31ஆம் நாள் இதய அஞ்சலி

09 - 07 - 95 அன்று நவாலியில் இடம் பெற்ற கோர விமானக் குண்டு வீச்சுக்குப் பலியான எமது பாடசாலை மாணவர்களான

சி. பிரசன்னா, இ. சுதா,
கோ. கபில்ராஜ், தே. பிரிந்தினி

ஆகியோருக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவிக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/நவாலி சென் பீற்றேஸ்,
றோ. க. த. க. பாடசாலை.

(37914)

# விடுதலைப் புலிகளை இராணுவத்தால் ஏன் நசுக்க முடியவில்லை?

## பிரிகேடியர் முனசிங்க விளக்கம்

கொழும்பு, ஓக. 8

ஒரு லட்சம் பேரைக் கொண்ட இலங்கை இராணுவத்தால் 10 ஆயிரம் பேரைக் கொண்ட புலிகள் இயக்கத்தை ஏன் நசுக்க முடியவில்லை என்று சிலர் கேட்கலாம். எண்ணிக்கை விவரங்களின் அடிப்படையில் இந்தப் போரை வெற்றி கொள்ள முடியாது.

இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்க கொழும்பு மகாவலி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரை நிகழ்த்திய போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தற்கொலைக் குண்டுத்தாக்குதல் போராளிகளை புலிகள் அனுப்பும் விதம் உலகில் வேறு எங்கும் இல்லாதஒன்று. அவர்களை இலகுவில் தோற்கடிக்க முடியாது. எனினும்—

எம்மிடம் தெட்டத் தெளிவான திட்டங்கள் இருக்கின்றன. இராணுவ நடவடிக்கைகள் முற்றுப் பெறவில்லை.

இராணுவத்தில் நான் ஒரு கப்டனாக இருந்தபோது இந்தப் போர் ஆரம்பித்தது.

நான் இப்போது ஒரு பிரிகேடியர். ஆனால் போர் இன்னும் தொடரவே செய்கிறது எனவும் பிரிகேடியர் முனசிங்க கூறினார். (க)





உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சீலத்திரு

ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்

திருநாள்

திருக்கைலாய ஞானபரம்பரை மெய்கண்டதேவர் ஆதீனத்தை ஈழத்தில் 1972 இலே நிறுவிய காஞ்சி தொண்டை மண்டலம் மெய்கண்டதேவர் ஆதீன

229 ஆவது குருமகா சந்நிதானம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளின்

நினைவு நாள் —இன்று

ஈழத்துச் சிவனடியார்கள், சைவப் பெரியார்கள், சிவாசாரியார்கள், சிவஞானிகள் அனைவரையும் அன்புடன் போற்றியவர். நாவலரிடம் ஈடுபாடுள்ளவர்.

ஈழத்திற்குப் பல தடவை வருகை தந்து சிவநெறியும் செந்தமிழும் வளர ஆதீனத்தையும், திருநெறிய தமிழ் மன்றத்தையும், பண்ணிசை - சித்தாந்த சாஸ்திர வல்லார்களையும் உருவாக்கிய சுவாமிகளின் திருவடிகளை நன்றியுடன் போற்றுகின்றனம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தசரபம்

ஞானப்பிரகாச சிவம்

முதல்வர்

மெய்கண்ட தேவர் ஆதீனம்

5, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

(37908)



## அறிவித்தல்

### யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து.)

பால் உற்பத்தியாளர்களே:

எமது சங்கம் பால் கொள்வனவு நிலையங்களை பின்வரும் விலாசத்தில் நிறுவியுள்ளது. தங்களின் பால் உற்பத்திகளை இக் கிளைகளில் ஏதாவது ஒன்றில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

மேலும் புதிதாக உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் உடன் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தங்கள் பாலை இலகுவாக சந்தைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து கொள்ளவும்.

பால் பாவனையாளர்களே!

தமக்கு வேண்டிய பாலை கீழ் குறிப்பிடும் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் வீட்டிற்கே நேரடியாகப் பால் தேவைப்படின் எமது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

எமது பால் கொள்வனவு விற்பனவு நிலையங்கள் அமைந்திருக்கும் இடங்கள் பின்வருமாறு:

கிளை 01:-
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

கிளை 02:-
பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

கிளை 03:-
காங்கேசன்துறை வீதி,
பொதுச்சந்தைக் கட்டடம்,
இணுவில்.

கிளை 04:-
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

கிளை 05:-
மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

கிளை 06:-
பிரதான வீதி,
பிரதானதபால் அலுவலகம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

கிளை 07:-
45, கோவில் வீதி,
நல்லூர்.

கிளை 08:-
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

கிளை 09:-
53, கனகரத்னம் வீதி,
அரியாலை
[09-08-95ஆம் திகதி கிளை திறக்கப்படவுள்ளது]

கிளை 10:-
பருத்தித்துறை வீதி,
வானவில் அருகில்,
யாழ்ப்பாணம்.
[10-08-95 ஆம் திகதி கிளை திறக்கப்படவுள்ளது]

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[சி-2008]


## நல்லூர் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 8

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் எட்டாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை விஜயலஷ்மி ராமலிங்க ஐயரின் பாட்டு.

7 மணி முதல் 8-30 மணி வரை திரு. எம். வர்ணகுலசிங்கத்தின் பாட்டு.

★ நல்லை ஆதீன கலாமண்டபத்தில் பி. ப. 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் சமயப் பேருரை—'கந்தரனுபூதி'

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்

மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் ''விஷ்ணு பாகவதம்'' தொடர் இசைப் பேருரையில் 'பிரகலாதன்' (உ-30-111)

## வங்கி ஓய்வூதியருக்கு

யாழ்ப்பாணம், ஓக 8

அண்மைய ராணுவ நடவடிக்கையின்போது வங்கி ஓய்வூதியர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு விவரங்களை வடமாகாண வங்கி ஓய்வூதியர் சங்கம் திரட்டி வருகிறது.

இதற்கெனத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுபாதிப்பு விவரங்களை நிரப்பி அதை மேற்படி சங்கத்துக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் கேட்கப்படுகின்றனர். [க]

## இறந்தவர் சுன்னாகம் வாசி

யாழ்ப்பாணம், ஓக 8

வலிகாமம் வடக்குப் பிரிவில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது சுன்னாகம் பகுதியில் ஷெல்தாக்குதலினால் உயிரிழந்த இனந்தெரியாத வயோதிபர் இனம் காணப்பட்டுள்ளார்.

சுன்னாகம் ஏ. ஜி. ஏ ஒழுங்கையைச்சேர்ந்த சின்னத்தம்பி மயில்வாகனம் (91 வயது) என்பவரே மரணமானவராவார். [ஒ-15]

## கப்பல்களுக்கு செஞ்சிலுவை பாதுகாப்பு தருகிறதா?

### சந்திரிகாவுக்கு தெரியாதாம்!

வடக்கே செல்லும் உணவுக் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பாதுகாப்பு வழங்குகின்றதா என்பது தனக்குத் தெரியாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

நவாலி தேவாலய வளவில் விழுந்த மோட்டார் குண்டினால் 60 பேர் மட்டுமே கொல்லப்பட்டதாக கொழும்பு மேற்றிராணியார் தம்மிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி ஒரு கேள்விக்கு கூறிய சமயம் —

யாழ். அரச அதிபர் இந்த தேவாலயத் தாக்குதலில் 114 பேர் கொல்லப்பட்டதாக கூறுகிறாரே என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

''யாழ். அரச அதிபர் புலிகளின் பணயக் கைதி போல் இருக்கிறார். ஏன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும் இது போன்ற அறிக்கை வெளியிட்டதே'' என்று ஜனாதிபதி பதில் கூறினார்.

தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விட்டு மறுபக்கம் யுத்தம் செய்கிறீர்களே என்று கேட்டதற்கு, புலிகள் தாக்கும் போது நாங்கள் படுத்துக் கொண்டிருக்க முடியுமா? எனக் கேட்டார் (ஒ-3)

## படையினரால் முழங்காலில் நிறுத்தப்பட்ட கிராமோதய சபைத் தலைவர்

இராணுவம் அழைத்தவுடன் செல்லாத கிராமோதய சபைத் தலைவர் ஒருவர் இராணுவத்தினரால் முழங்காலில் நிறுத்தப்பட்டார்.

மூதூர் பிரதேச கிராமோதய சபைத் தலைவர் ஒருவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

இராணுவத்தின் இச்செயலை கண்டித்து பிரஸ்தாப கிராமோதய சபைத் தலைவர் தட்டச்சு செய்து கடிதம் ஒன்றை மேலிடத்துக்கு அனுப்பினார் என்றும்—

அதன் பலனாக அவர் இராணுவத்தினரால் மீண்டும் அழைக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார் என்றும்—

அவருக்கு தட்டச்சு இயந்திரம் கொடுத்த பாடசாலை அதிபர் ஒருவரும் இராணுவத்தினரின் விசாரணைக்கு உள்ளானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-3]

## ராணுவத்தில் தமிழ்ப் பிரிவு சந்திரிகா இணக்கமாம்

### டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

கொழும்பு, ஓக. 8

இலங்கை இராணுவத்தில் தமிழ் பேசும் வீரர்களைக் கொண்ட படைப் பிரிவை அமைக்க ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளதாக ஈ.பி டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாட்டின் பல இன அமைப்பை பிரதிபலிக்கும் வகையில் இராணுவம் மாற்றப்பட வேண்டும் என்றும்—

அதற்கு தமிழ் பேசும் தேசிய படைப் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்றும் — தாங்கள் தெரிவித்த யோசனையை சந்திரிகா ஏற்றுக் கொண்டதாக அவர் கூறினார்.

தற்போது இலங்கை இராணுவத்தில் லட்சம் பேரில் பெரும்பாலானவர்கள் சிங்களவர் என்றும் அவர் கூறினார்.

## வடக்கு- கிழக்கை நிர்வகிக்க ஆலோசனை சபை வரும்

கொழும்பு, ஓக. 8

வடக்கு - கிழக்கில் மீட்ட பகுதிகளில் நிர்வாகத்தை நடத்துவது பற்றி ஆலோசனை தெரிவிக்க ''வடக்கு கிழக்கு ஆலோசனை சபை'' ஒன்றை ஜனாதிபதி நியமிக்க இருக்கிறார்.

அதிகார பரவலாக்கல் யோசனைகள் அங்கீகரிக்கப்படும் வரை வடக்கு- கிழக்கு ஆலோசனை சபை ஒன்றை ஏற்படுத்துவதற்கு தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தப் போவதாக ஜனாதிபதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆலோசனை சபை வடக்கு - கிழக்கை நிர்வகிப்பது குறித்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும். [எ-3]

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### பகை முடிக்க வருவாயே!

ஆறுமுக ரூபங்கொண்டு அமரர் படைத்-
தலைமை கொண்டு
அவுணர்குலப் படையழித்த அமரேசா!
அமரர் கடுஞ் சிறைவிடுத்து அழகுமயில் மீதமர்ந்து
ஆறுபடை வீடுகொண்ட அதிதீரா!
கூறுமடி யார்களின்று குமரப்பெரு மானேயென்று
குறையிரந்து கூவிடுதல் அறியாயோ?
கோலமயில் மீதிவர்ந்து கூரியசெவ் வேலுங்கொண்டு
கொடுங்கோலர் பகைமுடிக்க வருவாயே!
வீறுகொண்டு வயழ இன்று வெற்றிவாகை சூடவென்று
வேண்டும்வீர வேங்கையர்க்கு-அருள்வாயே!
விறல்மிகுந்த படையிருக்க வெற்றிவேலன்-
துணையிருக்க
வெஞ்சமருக் கஞ்சுவமோ விறல்வீரா
மாறுபட்டு வேறுபட்டு மானங்கெட்டு வீரங்கெட்டு
மண்ணுலகில் வாழ்ந்திடுதல் முறையாமோ
மாபெரும் நல் லூர்த்தலத்தில் மால்மருகனாகநின்று
மாண்புடைத் தமிழ் வளர்க்கும் முருகோனே!

- திருமதி க. குமாரசுவாமி.

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வும்: ந. வாகீசன், இல. 639/1, நாவலர் வீதி, யாழ்ப் பாணம். [37894]

கறுப்பு நிற அல்சேஷன் ஆண் நாயும் [13 மாதம்], Dachshund இன நாய்க்குட்டி களும் [3 மாதம்] விற்பனைக் குண்டு. இல. 36/1, ஆடிய பாத வீதி, கல்வியங்காடு. [37895]

### சீயாக்காய்ப் பவுடர்

இப்போது காவேரி சீயாக் காய்ப் பவுடரில் கருசலாங் கண்ணி என்னும் மூலிகை சேர்த்துத் தயாரிக்கப்படுவ தால் உங்கள் கூந்தல் கருமை நிறமாகவும் நீண்டு வளரக் கூடியதாகவும் உதவுகிறது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக் காய் பவுடர் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். (37851)

### இலகு திருமண சேவை

28 வயது மூலம் கிரக பாவம் - 31, சுவிஸில் வதி விடமுள்ளவருக்கும், 33 வயது ஆயிலியம், செவ்வாய் - 7, நோர்வேயில் Bio Chemist படித்தவருக்கும் பொருத்த மான மணப்பெண்கள் தேவை. இலங்கையில் திரு மணம் செய்து அழைப்பார் கள், தம்பதிகள் தெரிவுக்கு நாடுங்கள் து. விமலா, யா/ நாச்சிமார் கோவிலடி. [37909]

### தவறிவிட்டது

4-8-95 இரவு ஆனைக் கோட்டை - திருநெல்வேலிச் சந்திக்கு இடையில் நிவாரண முத்திரை(செ.மாகிறெட், சந்தி யாப்பிள்ளை) குடும்ப அட் டைகள், உலர் உணவு அட் டைகள், உடுப்புகள் மற்றும் பொருள்களுடன் உரப்பை தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் அந்தோனியார் ஆலய பங்குத்தந்தையிடம் ஒப்படைக்கவும். [37902]

கச்சேரியடிக்கும், விங்கம் கூல்பாருக்கும் இடையில் நக்காவீதி, அல்லது ஸ்ரான்லி வீதியில் கடந்த 03-08-95இல் 'மோலிலோறன்ஸ்' என பெயர் குறிப்பிட்ட கிட்டார் வகுப் புக் கொப்பி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின் வரும் விலாசத்தில் ஒப்படைக் கவும். S. K. Barington 18, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப் பாணம். (8628)

### உயர்தர விலங்கியல்

உயர்தர விலங்கியல் A/L மாதிரி வினாத்தாள் - 10 M. C. Q. மட்டும் 10 மாதிரி கட்டமைப்பு, கட்டுரை வரைக. வினாக்களும் விடை களும் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலை யம், யாழ்ப்பாணம். [சி-2000]

## ரயில் கடவை ஊழியர்கள் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் பணி யாற்றி வந்த ரயில்வே கடவை ஊழியர்களுக்கு கடந்த ஏழு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கு யாழ். செய லகத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் 1000 ரூபா அல வன்ஸ் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இவ்வருடம் ஜன வரி மாதம் முதல் இந்த அல வன்ஸும் வழங்கப்பட வில்லை. [இ-100]

---

ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
சட்டநாதர் கோயில் பின்வீதி

# தமிழீழ ஆடிவேல் விழா

11 - 08 - 1995 முதல் 12, 13 ஆகிய
மூன்று தினங்கள்
அதி கோலாகலமாகக் கொண்டாடப்படும்.

11 - 08 - 1995 வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக நண்பகல் 12-00 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 2-00 மணிக்கு ஆரம்பமாகி யாழ்நகர் அனைத்து வீதி யூடாக மாலை 7-00 மணிக்கு வண்ணார்பண்ணை சிவன் கோயிலைச் சென்றடையும்.

12 - 08 - 1995 சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வீதி வழியாக பகல் 12-00 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தை வந்தடையும். அங்கிருந்து 3 00 மணிக்குப் புறப்பட்டு மாலை 7-00 மணிக்கு கொக்கு வில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தை வந்தடையும்.

13 - 08 - 1995 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழி யாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை பகல் 12-00 மணிக்கு வந்தடையும். மாலை 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடூடாக மாலை 7 மணிக்கு ஆலயத்தை வந்தடையும். அத்தருணம் பக்தர்கள் புடைசூழ எம் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டு கிறோம்.

முக்கிய குறிப்பு:

வேல்ரதம் தங்கும் ஆலயங்களில்
"உதித்தனன் உலகமுய்ய"
என்னும் பொருள் பற்றி
தமிழருவி த. சிவகுமாரன் B. A. (Hons)
(அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.)
அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

இங்ஙனம்:
- தேவஸ்தானம்.

[37897]

---

# அந்தியேட்டி அழைப்பும்
## நன்றி நவிலலும்



## செல்லையா இராசம்மா

(காலஞ் சென்ற க. செல்லையா பொது முகாமை யாளர்-சாமுவேல் அன்சன்ஸ் கொம்னி அவர்களின் மனைவி)

தோற்றம்: 10—05—1913
மறைவு: 09—07—1995

இன்று (08-08-95) காலை அன்னாரின் இல் லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசன நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளு மாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

09-07-95 அன்று அன்னாரின் மரணச் சடங் குகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரிலும் கடி தங்கள் மூலமும் அனுதாபச் செய்திகளைத் தெரி வித்தவர்களுக்கும் மற்றும் எமக்குப் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது ஆறாத்துயரத் தில் பங்கெடுத்த அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
அமரரின் அன்புமிகு மகள்
இ. பரமேஸ்வரி

"செல்வராஜ கிரி",
உடுப்பிட்டி.

(37910)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



மண் உலகில்: 03 — 11 — 1934
விண் உலகில்: 09 — 07 — 1995

## திருமதி புஸ்பம் இரத்தினவேல்

அன்பான ஆருயிர் அம்மாவே!
நீங்களொரு தெய்வப் பிறவியம்மா
பண்பையும் பாசத்தையும் பாலோடு தந்த அம்மாவே
தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்து
வந்தாரை வழிகாட்டி வாழவைக்கும் வள்ளல்-
அம்மா நீ!

நீ உன்பிள்ளைகளுக்கு மட்டும் தாயல்ல அம்மா
ஊர்பிள்ளைகளு'கும் தாயம்மா நீ
பிறர்படும் துன்பம் தன் துன்பம் எனக் கொண்டு
அதை நீக்க முன் நிற்கும் பண்பாளன் நீ அம்மா!

மக்கள் சேவையே ஆண்டவன் பணியென எண்ணி
மாண்புடனே உன் சேவையை முடித்தாயம்மா
மண்ணுலகத்தில் உந்தன் சேவை
முடித்து விண்ணகத்தில்
அதைத் தொடர விரைந்து சென்றனையோ அம்மா!

—குடும்பத்தினர்.

உடுவில் வீதி,
மானிப்பாய்.

(37912)

---

# 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
## கவுரிகேல்பிள்ளை மரியதாஸன்

மலர்வு: 07 — 10 — 1935
உதிர்வு: 09 — 07 — 1995
திதி: 08 — 08 — 1995

உடலாலே பிரிந்த நீங்கள்
எங்களோடு வாழ்கிறீர்கள்
கடலாறு கதறுமாப்போல் நாங்கள்
காலமெல்லாம் கதறினாலும்
திடமாக நம்புகின்றோம் - நீங்கள்
தெய்வமாக வாழ்கிறீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
— குடும்பத்தினர்.

முதலாம் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(37911)

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## திட்டமிட்ட சதி!

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தர பரீட்சைக்கான, நேற்றைய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் தாமதமாகவே வந்து சேர்ந்தன. நேர அட்டவணைப்படி பரீட்சை காலை 8-30மணிக்கு ஆரம்பமாகியிருக்க வேண்டும்.

ஆனால் வினாத்தாள்கள் பருத்தித்துறையில் கப்பலில் இருந்து இறக்கப்பட்டதே மு. ப 9.30 மணிக்குத்தான்!

யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து மற்றும் தபால் சேவைகள் மிகவும் சீர்கெட்ட நிலையில் வினாத்தாள்கள் உரிய நேரத்தில் வந்து சேர்வதை உறுதி செய்திருக்க வேண்டியது பரீட்சைத் திணைக்களத்தின், அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மாணவர்களின் உயர்கல்வியை நிர்ணயிக்கும் மிக முக்கியத்துவம் பெற்றது. க. பொ. த. ப. உயர்தர பரீட்சை. அவர்களின் எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்கு ஒரு படிக்கல்லாகவும் அது விளங்குகிறது.

இது அரசாங்கத்துக்கும் அதன் அதிகாரிகளுக்கும் மிக நன்றாகத் தெரிந்த ஒன்று.

அரசாங்கமே தமிழர் தாயகத்தில் போரைத் தீவிரப்படுத்தியுள்ள வேளையில், உக்கிரமான எறிகணை வீச்சு, குண்டு வீச்சு என்று நாளாந்தம் பெரும் பதற்றநிலையை உருவாக்கி வரும் சூழலில் தமிழ் மாணவர்கள் எவ்வாறு மனம் ஒன்றித்துக் கல்வி பயின்று பரீட்சை எழுதுவது?

இராணுவத்தினரின் தாக்குதல்களால் உடல் பதற்றமும், உளப் பதற்றமும் பீதியுமே மேலோங்கி நிற்கும் போது, தமிழ் மாணவர்கள் இந்த முக்கியமான பரீட்சைக்குத் தயார் செய்வது எப்படி? பரீட்சை எழுதுவது எவ்வாறு? உயிருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக் குறித்து அச்சம் எழுந்துள்ள நிலையில், உளவளம் பலவீனப்பட்டுப் பாதிக்கப்பட்ட நிலையில் தமிழ் மாணவர்களால் தமது திறமையைக் காட்டமுடியுமா? இராணுவ அனர்த்தங்களால் அலைந்து உலைந்து திரியும் தமிழ்மாணவர்கள் எங்கிருந்து பரீட்சைக்குத் தயார் செய்வது?

தமிழ்மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் உள்ள கஷ்டமும், சிரமங்களும் ஏற்கனவே தெரிந்தவை தான். ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி தொடங்கிய "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கைக்கும், பரீட்சைக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் மூன்று வார இடைவெளி இருந்தது.

தமிழ் மாணவர் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதில் மிகச் சொற்ப அக்கறை இருந்திருப்பினும் நாடு முழுவதிலும் பரீட்சையை அரசு ஒத்தி வைத்திருக்க வேண்டும்.

இரண்டு பரீட்சைகள் நடத்துவதனால் பல்கலைக்கழக அனுமதியில் சிக்கல்கள் தோன்றும் என்ற காரணத்தை முன்னிறுத்தி—

தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் அரசு பரீட்சையை நடத்துவதே தமிழ் மாணவரின் உயர் கல்வியை, எதிர்காலத்தை வேண்டுமென்றே சிரழிக்கும் திட்டமிட்ட சதியாகும்!

இதில் என்ன சந்தேகம்? மறுத்துரைக்க அரசிடம் எதிர் நியாயம் ஏதாவது உண்டா? இப்படி ஓர் இடையூறான சூழலில், மனப்பதற்ற முற்ற வேளையில் இங்கே மாணவருக்குப் பரீட்சை நடத்த அரசுக்கு மனத்துணிவு வருமா?

## ஆலயங்களில்

சாவகச்சேரி டச்வீதி அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் நடைபெறுகிறது.

நாளை புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பழனி முருகனின் வேல் நகர்வலம் இடம்பெறும். வியாழக்கிழமை பகல் அஸ்டோத்தர (108) சங்காபிஷேகமும் மாலை 5 மணிக்கு திருவிளக்குப் பூஜையும் நடைபெறும். (சு-51)

## லியோ கழக கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ். இந்துக் கல்லூரி லியோ கழகத்தின் விசேட கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

# இரு தரப்பினரும் இணங்கினால்
# கனடா மத்தியஸ்தம் வகிக்க தயார்

## அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு அதிகாரி தகவல்

ஒட்டாவா, ஓக. 8

இலங்கை இன நெருக்கடியில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் இணங்கிக் கொள்வார்களேயானால், மத்தியஸ்த முயற்சி ஒன்றில் ஈடுபடுவதில் கனடா மகிழ்ச்சி அடையும்.

கனடாவின் வெளியுறவு அமைச்சில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பாக இருக்கும் சிரேஷ்ட அதிகாரி பிரையன் பேர்ட்டன் மேற்கண்டவாறு "ரொரன்டோ ஸ்ரார்" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஏதுவாக மத்தியஸ்த முயற்சிகளை செய்யுமாறு விடுதலைப் புலிகள் கனடா அரசைக் கேட்டிருப்பதாக தெரிவிக்கும் அப்பத்திரிகை —

"இந்த வேண்டுகோள் குறித்து நான் உத்தியோகபூர்வமற்ற முறையில் கேள்விப்பட்டேன். ஆனால் முறைப்படி நான் இன்னும் அறியவில்லை" என்று கனடிய வெளியுறவு அமைச்சர் ஆன்ட்ரு குலெட் தெரிவித்ததாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை இன நெருக்கடியைப் பொறுத்தவரை பயனுள்ள பங்களிப்பை செய்யக்கூடிய நாடாக கனடா விளங்கும் என்பது நிச்சயம். ஆனால் அத்தகைய முயற்சி ஒன்றில் எங்களை அர்ப்பணிக்கும் முன்னதாக எந்த நிபந்தனைகளின் கீழ் எவ்வாறு செயற்பட முடியும் என்பதைத் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கத்தோலிக்க ஆயர் ஒருவரின் ஊடாகவே விடுதலைப்புலிகள் தமது வேண்டுகோளை கனடிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதாகவும்—

ஒட்டாவாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் இது குறித்து கருத்துக் கூற மறுத்து விட்டதாகவும்—

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. [ஒ-3]

## தமிழீழ பாதுகாப்பு நிதி; பிரசாரக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணம், நல்லூர் தனி அரச அதிபர் பிரிவுகளில் அமைந்துள்ள — வாணிபம்/தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் — ஊழியர்களுக்கான தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவது தொடர்பான — சிறப்புக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. அனைத்து ஊழியர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

புகையிலை வாணிபர்கள், சுருட்டு உற்பத்தியாளர்கள், சுருட்டு தொழிலாளர்கள் ஆகியோருக்கான — தேசிய பாதுகாப்பு நிதி திரட்டுவது தொடர்பான — சிறப்புக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பெரிய புலம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

## தொண்டா ஆலோசனைக்கு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 8

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தை 5 ஆண்டுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பொறுப்பளிக்க வேண்டும் என்ற அமைச்சர் தொண்டமானின் ஆலோசனைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரெலோ ஆகியன எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தைக் கையளித்தல் என்ற அமைச்சர் தொண்டமானின் ஆலோசனையைத் தமது கட்சி நிராகரிப்பதாகவும், தேர்தல் ஒன்று நடைபெற்றால் அதில் பங்குபற்றத் தாம் எப்பொழுதும் தயாராக இருப்பதாகவும், தனியொரு கட்சிக்கு அதிகாரத்தைக் கையளிப்பது புத்திசாலித்தனமானது அல்ல என்று தாம் கருதுவதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

திரு. தொண்டமானின் ஆலோசனை "முற்றிலும் விழல்தனமானது" என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுக்களின் துணைத் தலைவருமான ரவூப் ஹக்கீம் வருணித்தார்.

அரசாங்கம் ஏன் வடக்கு கிழக்கு மாகாண நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கையளிக்கவேண்டும் என்பதைத் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும், சட்டபூர்வமான அரசாங்கம் எதுவும் ஆயுதந்தாங்கிய குழுக்களுக்கு ஒரு பெரிய மாகாணத்தை விட்டுக் கொடுக்காது எனவும் எந்த அரசியல் கட்சியும் இதை ஏற்றுக் கொள்ளமாட்டாது எனவும் அவர் கூறினார்.

ரெலோ பொதுச் செயலாளர் எம். கே. சிவாஜிலிங்கமும் தொண்டமானின் ஆலோசனையை நிராகரித்துக்கருத்து வெளியிட்டார். (க)

## சு. க. விலிருந்து ஹரி ராஜினாமா

கொழும்பு, ஓக 8

முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்துராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் கடந்த 3ஆம் திகதி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவிடம்தன துராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தார். (க)

## கோப்பாய் தொலைக்கல்வி நிலையம்

கோப்பாய் தொலைக்கல்வி நிலைய 93 — 95 குழு ஆரம்பக்கல்விப் பயிற்சியாளர்களையும் போதனாசிரியரையும் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்குக் காலை 8-30மணிக்குச் சமூகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் அறிவிக்கின்றார். (இ)

## மீனவரை சுடவேண்டாம்! இந்தியா அரசு கோரிக்கை

இலங்கையின் கடல் பிராந்தியத்துக்குள் தவறுதலாக வரும் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டாம், அவர்களை எச்சரித்து திருப்பி அனுப்பி விடுங்கள்.

மேற்கண்டவாறு இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கோரி உள்ளது.

சமீபத்தில் இலங்கையின் ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய தாக்குதலில் 5 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டது. தெரிந்ததே.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையில் மீண்டும் சண்டை மூண்டிருப்பதால் இலங்கையின் கடல் பிராந்தியத்துக்குள் வர வேண்டாம் என்று இந்திய மீனவர்களுக்கு அறிவிக்குமாறு இலங்கை அரசு, இச்சம்பவத்தின் பின்னர், இந்திய அரசைக் கேட்டிருந்தது.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே இந்திய மீனவர்களை சுட வேண்டாம் என்றும் எச்சரித்து திருப்பி அனும்புப்படியும் இந்தியா கேட்டுள்ளது. [இ]

## 8 வங்கிகளின் ஊழியர் சம்பள உயர்வு பெறுவர்

### ஒப்பந்தம் கைச்சாத்து

எட்டுத்தனியார் வங்கிகளின் நிர்வாகத்தினருக்கும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துக்கும் இடையில் சமீபத்தில் கைச்சாத்தான கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம்இந்த வங்கிகளில் கடமை ஆற்றும் ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஊழியரின் திரட்டு சம்பளத்தில் 31 சத வீதம் உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 31ஆம்திகதி தொடக்கம் அமுலுக்கு வரத்தக்க விதத்தில் இந்த சம்பள அதிகரிப்பு அமுலுக்கு வரும் என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

ஹட்டன் தேசிய வங்கி, கொம்மேர்சல் வங்கி, ஸ்ராண்டட் சார்ட்டட் வங்கி, ஹொங்கொங் அன்ட் ஷாங்காய் வங்கி, ஸ்ரேட் பாங் ஒப் இந்தியா, இந்தியன் வங்கி, ஹபீப் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஆகியவையே சம்பள உயர்வுபெறும் இந்த எட்டு வங்கிகளும் ஆகும். (இ)

## மகாவலி ஊழியர்கள் 16 பேர் கடத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஓக. 8

மட்டக்களப்பின் எல்லைப் புறமான வெலிகந்தவுக்கு அண்மையில் சிங்களக் குடியிருப்புப் பகுதியில் உள்ள மகாவலித் திட்ட வேலைப் பகுதியில் இருந்து 16 ஊழியர்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இரு உழவு இயந்திரங்கள், ஒரு ஜீப் வண்டி, புல்டோசர் என்பனவும் கடத்திச் செல்லப்பட்டுள்ளன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

## மட்டு. வாகரைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

வாழைச்சேனை, ஓக 8

மட்டு. மாவட்டம் வாகரைப் பகுதியில் கடந்த புதன்கிழமை, ஸ்ரீலங்கா விமானப் படையினர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தினர்.

வாழைச்சேனை பகுதிக்கு மேலாக சிறிதுநேரம் பறந்த விமானம், வாகரையில் இரு இடங்களில் அடுத்தடுத்து குண்டுகளை வீசியது. குண்டுச் சத்தம் சுமார் 20 மைல் தூரம் வரை கேட்டதாகத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி ஸ்ரீலங்காவிற்கு புதிய கடன்களை வழங்கும்

கொழும்பு, ஓக. 8

இந்த ஆண்டு ஸ்ரீலங்கா உலக வங்கியிலிருந்து 10 கோடி அமெரிக்க டொலர்களை (500 கோடி ரூபா) கடனாகப் பெற முடியும் என்று உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி றொபேட் டோபென்ஜ் ஜெறொட் கடந்த 3 ஆம் திகதி கூறினார்.

ஸ்ரீலங்காவுக்குப் புதிய கடன்கள் வழங்குவதை உலக வங்கி 199௪ ஆம் ஆண்டு முதல் 2ஆண்டுகளாக நிறுத்தி வைத்துள்ளது.

அப்பொழுதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க 1994 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றை மனதிற் கொண்டு பிரமாண்ட சேமநலன் திட்டத்தை முன்வைத்தார். இதை அடுத்தே உலக வங்கிக் கடன்கள் நிறுத்தப்பட்டன. (க)

## 2 மணிநேரம் தாமதமாக---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

8-30 மணிக்கே பருத்தித்துறை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து வினாத்தாள் பொதிகள் 9-30 மணியளவிலேயே இறக்கப்பட்டன. அதன்பின்னரே அங்கிருந்து பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

அதனால் பரீட்சார்த்திகள் 10-30 மணியளவிலேயே பரீட்சை எழுத முடிந்தது.

இந்தப் பரீட்சையின் எஞ்சிய எல்லாப் பாடங்களுக்குமான வினாத்தாள்களும் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

[ஐ-4-173-13]

உ

நீர்வேலி அருள்மிகு

## செல்லக் கதிர்காம சுவாமி கோவில்

# தேர்த் திருவிழா

9-8-1995 புதன்கிழமை ரதோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

காலை: 6.30 மணிக்கு வசந்தமண்டப பூசை

காலை: 8. மணிக்கு
தேவிக ஆறுமுகப்பெருமான் எழுந்தருளல், ரதாரோகணம்

பகல்: 11 மணிக்கு ரதவவரோகணம்

**சிறப்பு நிகழ்ச்சிகள்**

கைதடி பஞ்சமூர்த்தி குழுவினர்
அளவெட்டி பத்மநாதன் குழுவினர்
விசேட மேள நாதஸ்வரக் கச்சேரிகள்
இடம் பெறும்

உபயம்:
கிருஷ்ணபிள்ளை ஆனந்தன்
குடும்பத்தினர்

நீர்வேலி
7-8-95

[37926]



## தாலிக்கொடி தவறிவிட்டது

01-08-95 அன்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் தாலிக்கொடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

க. தம்பித்துரை,
பிரபாகரன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[37921]



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

# முக்கிய அறிவித்தல்

09-08-1995 புதன்கிழமை வெகுஜன அமைப்புக்கள் நடத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளும் முகமாக எமது அங்கத்தவர்கள் அனைவரையும் அன்று காலை 8-30 மணிக்கு நாச்சிமார் கோவிலடியில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்

[சி-2019]



# முக்கிய அறிவித்தல்

எமது கழகத்திற்குட்பட்ட அனைத்து வணிகர்களும் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையான விவசாய உள்ளீட்டுக்கான தடை மற்றும் கண்மூடித்தனமான இராணுவத்தாக்குதல்களைக் கண்டித்தும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று 09-08-95 புதன்கிழமை நடைபெறவுள்ளதால் இப்பேரணியில் அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொண்டு உங்கள் பங்களிப்பை செலுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:—

★ நல்லூர் வட்டத்துக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களும் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி சந்தியில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

★ பேரணி ஆரம்பிக்கப்படும் இடம் நேரம் என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

— நன்றி—

செயலாளர்
நல்லூர் வணிகர்கழகம்.

[சி-2016]





## யாழ். மாவட்ட வீடியோ

படப்பிடிப்பாளர்களுக்கான

# அவசர கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் **10-08-1995** வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி தீப் வீதியிலுள்ள நிதர்சனத்தின் நடுவப் பணியகத்தில் நடைபெற உள்ளதால் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(அவசிய கலந்துரையாடலாதலால் அனைவரது வருகையும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.)

— செயலாளர்,
கலை ஊடக இணையம்.

[சி/2018]


### மட்டு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

வாகரைப் பிரதேசத்தில் அண்மைக் காலங்களில் இராணுவ முகாம்கள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன என்பது தெரிந்ததே.

கடந்த 1990ஆம் ஆண்டுக்குப் பின் வாகரையில் இடம்பெற்ற முதலாவது விமானத் தாக்குதல் சம்பவம் இதுதான் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

### கொழும்பில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இறது.

கொழும்பு சுதந்திர சதுக்கம் மற்றும் ஜப்பானியத் தூதரகம் ஆகியவற்றுக்கு அருகில் இந்த அலுவலகம் அமைந்துள்ளது.

இளநீர் வண்டில்

இளநீர் ஏற்றிக்கொண்டு தள்ளு வண்டில் ஒன்றை ஒருவர் தள்ளி வந்ததாகவும், அந்த வண்டில் அலுவலகத்தின் முன்புறத்தில் நுழைந்ததும் குண்டு வெடித்ததாகவும் நேரில் கண்ட சாட்சிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

வண்டிலைத் தள்ளி வந்தவரும் குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 15 கிலோ அதிசக்தி வாய்ந்த வெடிப் பொருள்களைக் கொண்ட குண்டே வெடித்திருக்கலாம் என்று பொலீஸார் மதிப்பீடு செய்துள்ளனர்.

குண்டு வெடிப்பில் மேல் மாகாண சபையின் மாடிக் கட்டடத்தின் நிலப்பகுதி பெரும் சேதமடைந்தது. மாடிப்பகுதியிலும் பரவலாகச் சேதம் ஏற்பட்டது.

முதல்வர்
அருந்தப்பு

அச் சமயம் அலுவலகத்துக்குள் தமது அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த மேல் மாகாண முதலமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அருந்தப்பு.

உயிரிழந்த 21 பேரில் பத்துப் பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

படுகாயமடைந்த 52 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

இத் தாக்குதல்களுக்கு எல்லாளன் படையே காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கும் தகவல்களை கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் வெளியிட்டிருக்கின்றன.

எல்லாளன் படையின்
எச்சரிக்கை

உல்லாசப் பயணிகளின் இலங்கை வருகையாலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதாலும் கிடைக்கும் வருமானத்தை இலங்கை அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை நடத்துவதற்கு பயன்படுத்துவதால்—

உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு வரவேண்டாம் என்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்ய வேண்டாம் என்றும் எல்லாளன் படை எச்சரித்திருந்தது தெரிந்ததே

இத்தகைய எச்சரிக்கையை ஞாபகமூட்டியும் —

இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ். குடாநாட்டில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு பழி வாங்கும் விதத்தில் தெற்கில் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்தும்— கடந்த 30 ஆம் திகதி எல்லாளன் படை அனுப்பிய கடிதம், கடந்த சனியன்று வெரித்தாஸ் வானொலி சேவைக்குக் கிடைத்ததாக அச்சேவையில் தெரிவிக்கப்பட்டது. (உ-3-4-6)

# இருவருக்குப் பார்வை தந்தார் போராளி

வீரச்சாவடைந்த போராளி ஒருவரின் கண்கள், இரண்டு பேருக்கு, இருண்ட உலகத்தை நீக்கி ஒளி கொடுத்துள்ளன.

கிளிநொச்சியைச் சேர்ந்த பொன்னம்பலம் சுமதி என்ற 29 வயது மங்கை கடந்த பதினேழு வருடங்களாகக் கண் பார்வை இழந்திருந்தார். கிட்டிப் புள் கண்ணில் பட்டதால் இவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த 40 வயதான அந்தோனிப்பிள்ளை யேசுதாசன் கிளாலி இறங்குதுறையில் பொதி சுமக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்.

ஒரு மாதத்துக்கு முன்னர் வேலை முடிந்து அங்குள்ள குளத்தில் குளித்ததால் ஏற்பட்ட கடியினால் கண் பார்வை இழந்தார்.

இவர்கள் இருவருக்கும், வீரச்சாவடைந்த போராளியின் கண்களை, யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் மாற்று சிகிச்சை மூலம் பொருத்தினார்.

இந்தப் போராளி மக்களைக் காப்பதற்காக தனது உயிரை ஈந்ததுடன் இருவருக்குப் பார்வை கொடுக்கத் தன் கண்களையும் ஈந்த பெருமைக்குரியவராகிறார்.

# தீர்வுத் திட்டம் குறித்து ஐ.தே.க. கட்சிக்குள் பிளவு

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பதில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

அரசின் தீர்வுத் திட்டத்தை முழு அளவில் பரிசிலனை செய்துவிட்டு ஐ. தே. கட்சி தனது கருத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தும் என்று ஐ. தே. கவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் ''சண்டே ரைம்ஸ்'' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

தீர்வுத் திட்டம் குறித்து ஐ. தே. க உறுப்பினர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு நிலவுவதாகவும்—

தீர்வுத் திட்டத்தை ஏற்பதா அல்லது இல்லையா என்ற முடிவு 1994 ஐ. தே. க. பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தை அடிப்படையாக வைத்து தீர்மானிக்கப்படும் என்றும் அந்த சிரேஷ்ட உறுப்பினர் தெரிவித்ததாக ''சண்டே ரைம்ஸ்'' மேலும் தெரிவித்தது.

ஐ. தே. கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வடக்கு—கிழக்கை நிரந்தரமாக இணைப்பதை எதிர்க்கிறது. அத்துடன் மாகாண எல்லைகளை மாற்றுவதையும் எதிர்க்கிறது.

அதேசமயம் 1994 டிசம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது காமினி திஸநாயக்காவின் தேர்தல் விஞ்ஞாபனம், கூடுதல் அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்துகிறது.

### திருமலையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரைக் கடத்தியவர்கள் அவரை கொலை செய்யமுயற்சித்ததாகவும்.

ஆனால் துப்பாக்கி வெடிக்காததால் அவர் தப்பிவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### தாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதும் கடினமே —

இவ்வாறு ஏ.எவ்.பி.செய்தி நிறுவனத்தின் கொழும்பு முகவர் அமல் ஜெயசிங்கா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

நேற்று மேல் மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்புக் குறித்துக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு சொன்னார். (அ)

### எமது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னும் தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் ஊடுருவுவது உங்களுக்குக் கவலை தரவில்லையா எனக் கேட்டதற்கு—

ஓரளவிற்கு கவலை தருகிறது. கொழும்பு நகரையும் நாட்டின் ஏனைய பகுதிகளையும் எங்களால் பாதுகாக்க முடிந்துள்ளது. போர் நடவடிக்கை நடைபெறும் இடங்களைத் தவிர மற்ற இடங்களை பாதுகாக்க முடிந்துள்ளது. போர் தொடங்கியது முதல் கடந்த 3 மாதங்களாக கொழும்பில் மிக பலத்த பாதுகாப்பு உள்ளது. இதனாலேயே பல தற்கொலைக் குழுக்களையும் நாங்கள் பிடிக்க முடிந்தது. இவர்களில் பெரும்பாலானவர்கள் என்னைக்கொல்ல அனுப்பப்பட்டவர்கள். இந்த முறை வந்தவர்கள் புலிகளாக இருந்தால் இந்த ஒருமுறை அவர்கள் பாதுகாப்பை முறியடித்து விட்டார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

ஆனால் சாதாரணமாக கடந்த 12 ஆண்டுகளில் இருந்ததைவிட கொழும்பு நகரத்தில் இப்போது பாதுகாப்பு மேலாகவே உள்ளது — என ஜனாதிபதி பதிலளித்தார். [ஐ-4]


# இதய அஞ்சலி

யாழ். இந்துவின் புகழ்பூத்த மூத்த பழைய மாணவனும் பழைய மாணவர் சங்க செயற்பாட்டிற்கு, அயராது உழைத்தவரும் சைவப் பணிக்காகத்தம்மை நீண்டகாலம் அர்ப்பணித்தவரும் சைவபரிபாலன சபையின் முன்னாள் தலைவரும் 'இந்துசாதனம்' பத்திரிகையின் கௌரவ ஆசிரியரும் பிரபல சட்டத்தரணியுமான

## ஆர். என். சிவப்பிரகாசம்

ஐயா அவர்கள் 6-8-95 ஆம் திகதி இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு துயருறுகின்றோம். அன்னாருக்கு பழைய மாணவர் சங்கத்தினராகிய நாம் ஆழ்ந்த இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ். இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம்

(சி/2020)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-08-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.